அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 159 /2017
தேதி : 15.12.2017

**திருவண்ணாமலை ரமணர் ஆசிரம விபத்து**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

நேற்று திருச்செந்தூரில் முருகன் கோவிலில் மேற்கூரை விழுந்த விபத்தில் ஒரு பெண் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து இன்று திருவண்ணாமலை ரமணர் ஆசிரமத்தில் சுற்றுச்சுவர் இடிந்து விழந்து குமரேசன், காதர் ஆகிய 2 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக உள்ளது.

திருவண்ணாமலை கிரிவலப்பாதை கால்வாய் தோண்டும் பணியின் போது ஏற்பட்ட அதிர்ச்சியால் இச்சுவர் இடிந்து விழுந்தது என விபத்திற்கான காரணமாக சொல்லப்படுகிறது. காரணம் எத்தகையதாக இருந்தாலும், இது போன்ற விபத்தும் உயிரிழப்புகளும் திருத்தலங்களில் நிகழ்வது மன வேதனையை அளிப்பதாக உள்ளது.

ஆலய நிர்வாகம், அறநிலையத்துறை நிர்வாகம் மற்றும் அந்தந்த ஆசிரமங்களைச் சேர்ந்த நிர்வாகம் அனைவரும் ஒருங்கிணைந்து இதுபோன்ற விபத்துகள் இனியும் தொடராமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்விபத்தில் உயிரிழந்த குமரேசன், காதர் அவர்களின் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், காயமடைந்த ராஜேஷ் என்பவர் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com